# 15 இறையாட்சியும் உண்மை அமைதிக்கான குரல்களும்




நமது நாட்டிலும் உலகின் பல்வேறு நாடுகளிலும் நிலவும் அமைதியற்ற சூழ்நிலையில், அமைதிக்கான அவசியத்தை இன்று நாம் தெளிவாக உணரக் கூடியதாக உள்ளது. உண்மை அமைதி என்பது, நீதியுடன் கூடிய சமாதானமிகு நிலையாகும். மக்கள் ஒடுக்கப்பட்டு துன்பப்படுத்தப்படும்போது, உண்மையை வெளிப்படுத்த முடியாத சூழ்நிலை உருவாகலாம். இவ்வாறான வேளைகளில் சிலர் தனியாகவும் சமய, சமூக நிறுவனங்களுமாக அநீதிச் செயல்களைக் கண்டித்து, அமைதிக்காக உழைக்கின்றனர். தூய ஆவியானவர் அனைத்து உண்மையையும் நாம் அறிந்து கொள்ள உதவுகிறார். அதன் அடிப்படையில் செயல்புரிய வேண்டிய பலத்தையும் தருகிறார்.

*அவரே உண்மைய வெளிப்படுத்தும் தூய ஆவியானவர்*
*யோவான் 14 : 17*

இவ்வாறான ஒரு நிகழ்வை மீக்கா இறைவாக்கினரின் அனுபவத்தில் நாம் காண்கிறோம். மீக்கா 4 : 3 இல் பல மக்களினங்களுக்கு இடையேயுள்ள வழக்குகளைத் தீர்த்து வைக்கிறார்; தொலைநாடுகளிலுள்ள வேற்றினத்தாருக்கு நீதி வழங்குகிறார்; அவ்வாறு நீதி பெற்றுக் கொண்டவர்கள் தங்கள் போர் ஆயுதங்களை கலப்பையாகவும், அரிவாள்களாகவும், மாற்றிக்கொள்கிறார்கள். ‘அவர்கள் வாள் எடுக்கமாட்டார்கள்; போரைப் பற்றி நினைக்க மாட்டார்கள். அதற்குப் பதிலாக அமைதியாக திராட்சைத் தோட்டத்திலும், அத்திமரத்தின் கீழும் அமர்ந்து வழிநடக்க முனைவார்கள்’. இவ்வாறான நீதியுடன் கூடிய உண்மையான அமைதியை ஏற்படுத்தவும் ஒரு தார்மீக சமுதாயத்தைக் கட்டியெழுப்பவும் கிறிஸ்தவர்கள் அழைக்கப்படுகின்றனர்.

12 ஆம் நூற்றாண்டில் மக்களின் வாழ்வில் அமைதியைக் கொண்டுவர உதவிய அசீசியின் புனிதர் பிரான்சிஸ் மற்றும் இன்று தென்னாபிரிக்காவில் அமைதியைக் கொண்டுவருவதற்கு நெல்சன் மண்டேலாவிற்கு உதவிய பெரும் பேராயர் டெஸ்மன் டுட்டு என்போரை அமைதிற்கான குரல்கள் எனக்குறிப்பிடலாம்.

## அசீசியின் புனிதர் பிரான்சிஸ்

12 ஆம் நூற்றாண்டில் பரந்து வியாப்பித்திருந்த துறவற இயக்கத்தில் பாரிய மாற்றம் நிகழ்ந்து கொண்டிருந்தது. துறவிகள் தங்கள் மடங்களுக்கு வெளியே சென்று போதித்து, சுகமில்லாதவர்களைப் பேணி, வறியவர்களுக்கு உதவியளித்தனர். இவ்வாறான சூழ்நிலையில் ஆடம்பர வாழ்வை வாழ்ந்து கொண்டிருந்தபோதும் ஏழைகளுக்குத் தாராளமாக உதவி வழங்கி வந்த பிரான்சிஸ் ஒரு தரிசனம் கண்டார். இடிந்து பாழடைந்து கிடந்த ஆலயக் கட்டிடங்களை புனரமைப்பதற்கு அந்த தரிசனத்தின் மூலம் அழைக்கப்பட்டார்.

ஒருநாள் ஆண்டவர் இயேசு தமது சீடர்களை வெளியே பணி செய்ய அனுப்பிய போது கொடுத்த அறிவுரைகளை மத்தேயு நற்செய்தியில் (10.7) வாசித்தார். பணத்தையோ மேலதிக ஆடைகளையோ கொண்டு செல்லாது, இறைவனைப் பற்றி போதிக்கும்படியான கட்டளை அவருக்கு அறைகூவலாக அமைந்தது. ‘இதனையே இதுவரை இதயபூர்வமாக எதிர்பார்த்திருந்தேன்’ என்று கூறி திருப்பணிக்கான அழைப்பை அவர் ஏற்றார் அன்று.

அதன் விளைவாக பல இடங்களுக்குச் சென்று போதித்தார். மக்களைச் சந்தித்த வேளையில் ‘**கடவுள் உங்களுக்கு அமைதியை அருள்வாராக**’ என்று வாழ்த்தினார். பலரும் அவரைப் பின்பற்றத் தொடங்கினர்; அவர்கள் தங்கள் உடைமைகள் அனைத்தையும் வறியோர்களுக்கு வழங்கி **எளிமையான வாழ்க்கையை** வாழ்ந்தனர். இதுவே இவ்வுலகின் நிலையற்ற செயல்களிலிருந்து விடுவித்து மெய்யான அமைதியைத் தரும் என்று புனித பிரான்சிஸ் போதித்தார்.

இயற்கையை நேசித்த இவர் பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் கூட போதித்தார். இவரின் அமைதியை உணர்ந்து அனுபவித்த பறவைகள், மரங்களிலிருந்து வந்து இவருக்குச் செவிமடுத்தன. சூரியனை சகோதரனாகவும், நீரை சகோதரியாகவும், உலகை தாயாகவும் கருதி அவற்றிற்காகச் செபித்து வந்தார்.

இவர் கிறிஸ்துவின் வாழ்விற்கு மிகக் கிட்டிய வாழ்வை வாழ்ந்தார் என்று பலராலும் கருதப்பட்டது. கிறிஸ்துவில் முற்றிலும் ஒன்றித்துக் காணப்பட்ட இவரின் வாயிலும், செவியிலும், கண்களிலும், கரங்களிலும் இயேசு இருந்தார் என்று கூறப்பட்டது.

## செயன்முறை

புனிதர் பிரான்சிஸ் அமைதிக்காக அன்று செய்த செபம் இன்றும் கருத்துடன் செபிக்கக்கூடியதாய் இருக்கிறது. எனவே சேர்ந்து செபிப்போம்.

*என்னை உம் சமாதானத்தின் கருவியாக்கியருளும் இறைவா!*
*எங்கே வெறுப்பு நிலவுகின்றதோ அங்கு அன்பையும்,*
*எங்கே குற்றம் இழைக்கப்படுகின்றதோ அங்கு மன்னிப்பையும்,*
*எங்கே பிரிவினையுள்ளதோ அங்கு ஒற்றுமையையும்,*
*எங்கே தெளிவின்மை காணப்படுகின்றதோ அங்கு உண்மையையும்,*
*எங்கே மனத் தளர்வுள்ளதோ அங்கு நம்பிக்கையையும்,*
*எங்கே இருள் சூழ்ந்துள்ளதோ அங்கு ஒளியையும்,*
*எங்கே துக்கம் நிறைந்துள்ளதோ அங்கு மகிழ்வையும் ஏற்படுத்த*
*என்னை உம் சமாதானத்தின் கருவியாக்கியருளும் இறைவா!*

*நான்,*
*ஆறுதலைப் பெறுவதனைப் பார்க்கிலும் பிறர்க்கு ஆறுதல் அளிக்கவும்,*
*அன்பைப் பெறுவதற்கு மேலாய் அன்பு செலுத்தவும்,*
*புரிந்து கொள்ளப்படுவதற்கு மேலாய் பிறரைப் புரிந்து கொள்ளவும்*
*எனக்கு உதவியருளும் சுவாமி!*

*ஏனெனில்,*
*ஒருவர் பிறருக்கு கொடுத்தலிலேயே நிறைவைப் பெற்றுக் கொள்ளவும்,*
*தன்னை வெறுமைப்படுத்தலில் தன்னை அறிந்து கொள்ளவும்,*
*பிறரை மன்னிப்பதன் மூலமே மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளவும்,*
*பிறருக்காய் உயிர் துறத்தலிலேயே நித்தியவாழ்வைப் பெறவும்*
*கூடியதாக உள்ளது.*
*ஆமென்*

## பெரும் பேராயர் டெஸ்மன் டூட்டு


தென் ஆபிரிக்கதாவில் வாழும் பெரும்பான்மையினர் கறுப்பினத்தவர் ஆவர். அங்கு குடியேறியிருந்த சிறுபான்மை வெள்ளை இனத்தவர், அரசியல், பொருளாதாரம், நீதித்துறை போன்ற அனைத்திலும் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். கறுப்பினத்தவர் முக்கிய நகர எல்லைகளுக்குள் வாழவோ, தேசிய விளையாட்டுக்

குழுவில் அங்கம் வகிக்கவோ தடைசெய்யப்பட்டிருந்தனர். பெரும்பான்மை கறுப்பினத்தவர்கள் தம் சொந்த நாட்டிலேயே அடிமைகள் போல் வாழ்ந்து வந்தனர். இந்த ஒடுக்குமுறை ஆட்சிக்கு எதிராக அந்நாட்டின் பேராயர் டெஸ்மன் டுட்டு, நெல்சன் மண்டேலா போன்றோருடன் சேர்ந்து போராடினார். பல இனத்தவரைக் கொண்டிருந்த தென் ஆபிரிக்க திருச்சபையும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கிற்று.

தென் ஆபிரிக்கா, 'ஆபிரிக்கானோ' என்று அழைக்கப்பட்ட வெள்ளையரின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த காலத்தில் அதன் 20வது குடியரசு தினத்தைக் கொண்டாடியது. அவ்வேளையில் பேராயர் 'நாம் கொண்டாடுவதற்கு என்ன இருக்கிறது? கறுப்பினத்தவராகிய நாம் ஒடுக்கப்படுவதையும், சுரண்டப்படுவதையும் நாமே கொண்டாடுவதற்காக அழைக்கப்படுகிறோம்! நாம் விரும்புவது எசமானின் மேசையிலிருந்து விழும் துணிக்கையையல்ல. நமக்கு வேண்டியதை நாமே தீர்மானித்துப் பெற்றுக் கொள்வோம்' என்றார்

பேராயர் டுட்டு தென் ஆபிரிக்க கிறிஸ்தவ மன்றத்தின் செயலாளராகக் கடமையாற்றிய போது அரச ஆணைக்குழுவால் விசாரிக்கப்பட்டார். அவ்வேளையில் 'தென் ஆபிரிக்க கிறிஸ்தவ மன்றத்தை வெள்ளையரின் அரசு கலைக்கட்டும். ஆனால் நீதி, அன்பு, இரக்கம் என்பவற்றின் அத்திவாரத்தின் மேல் அமைந்துள்ள இறையாட்சி எப்போதும் தோல்வியுறாது. நாம் இந்த அரசிற்கோ, அநீதிச் செயல்களைச் செய்பவருக்கோ ஒடுக்கு முறைகளைக் கையாள்பவருக்கோ அஞ்சவில்லை. ஏனெனில் நமது வெற்றி நம்மில் அன்புகூறும் இறைவனின் மூலமாகக் கிடைக்கும். அதுவே அவர் விருப்பாகும்' என்றார். இறுதியில் அகிம்சை முறையில் தென் ஆபிரிக்கா அமைதியாக விடுதலையடைவது சாத்தியமாயிற்று.

### அருட்திரு சோமா பெரேரா



கண்டி பிலிமத்தலாவை, இலங்கை இறையியல் கல்லூரியின் இணையற்ற முதல்வராயிருந்து பின்னர் மெதடிஸ்த திருச்சபையின் பேரவைத் தலைவராகப் பணிபுரிந்தார். 1983ம் ஆண்டில் கனடாவில் உலகத் திருச்சபை மகாநாட்டில் கலந்துகொண்டிருந்தபோது இலங்கையில் இனக்கலவரம் ஏற்பட்டதை அறிந்து கொண்டார். உடனடியாக நாடு திரும்பியவர் 'தேவை ஏற்படின் நான் தமிழ் மக்களுடன் இணைந்து உயிர்துறக்கவும் தயங்க மாட்டேன்' என்று கூறினார். பல தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பளித்ததுடன் வன்முறையாளர்களின் செயல்களை வன்மையாகக் கண்டித்தார்.

இனங்கள், சமயங்கள் ஆகியவற்றின் ஒற்றுமைக்காக அயராது உழைத்தார். இலங்கை குடியுரிமை இயக்கத்தின் தலைவராக நியமிக்கப்பட்டதன் மூலம் இவ்வுண்மை உறுதியாயிற்று. நீதியின் அடிப்படையிலான இலங்கையின் இன ஒற்றுமைக்காக உழைத்த அரும்பெரும் தலைவர்களில் ஒருவராக இன்றும் ஒரு அன்புத் தந்தையாக 'சோமாபோதகர்'யாவரின் மதிப்பையும் பெற்றவராகத் திகழ்கின்றார்.

**செயன்முறை**

*இறைவன் இயேசு தம் எதிரிகளை எவ்வாறு நேசிக்கிறார் என்று திருவிவிலியப் பகுதிகளில் இருந்து கண்டறியவும்.*

**செயற்பாடு**

*நிலையான அமைதியை நிலைநாட்டுவதற்காக ஒரே வழிமுறை அமைதியின் அடிப்படையில் அமைய வேண்டும் என்பதற்கான சில உதாரணங்களை அறிந்து நிரல்படுத்தவும்.*